செயற்பொறியாளர், பொபது. திட்டம் & வடிவமைப்பு கோட்ட அலுவலகம், காரைக்குடி.

முன்னிலை: திரு.மா.முத்தமிழ்செல்வி, பி.இ.,
செயற்பொறியாளர், பொபது.நீஆது

------

கோ.செ.மு.க.எண்.பஎ2 /55/2020-2/நாள்: 15.12.2020.

பொருள்: நியமனம் (நேரடி) – தமிழ்நாடு அமைச்சுப்பணிதொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2018-19 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற போட்டித் தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய பணிகளுக்கானது – இளநிலைஉதவியாளர்கள் பதவிக்கு தெரிவு செய்து பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிவேட்பாளர்கள் - செல்வி.S.நாகலட்சுமி இளநிலைஉதவியாளர், (பிறந்த தேதி -10.02.1998)- இக்கோட்ட கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பரமக்குடி திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டத்தில் 25.09.2020முப முதல் பணியில் சேர்ந்துள்ளமை – அவர்தம் பதவியில் பணிவரன்முறை செய்துதகுதிகாண் பருவம் துவங்குதல் - ஆணை.

பார்வை:

1) சென்னை-3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் செயலாளர் அவர்கள் கடித எண்.2496/PSD-I/2020 நாள். 29.05.2020.
2) முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆ.து மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) அவர்கள் செயல்முறை எண்.எஸ். 3(3)/35935/2020/நாள். 17.09.2020
3) தலைமைப்பொறியாளர், (திட்ட உருவாக்கம் ) அவர்கள் செயல்முறை ஆணை எண். எஸ். 1(2)/1449/ 2020/ நாள்.21.09.2020
4) திருச்சி திட்ட உருவாக்க வட்ட கண்காணிப்புப் பொறியாளர் பொபது, செயல்முறை எண்.பஎ2/23/(1962-6) / 2020/ நாள்.24.09.2020
5) காரைக்குடி திட்டம் மற்றும் வடிவ்மைப்பு கோட்ட செயற்பொறியாளர் அவர்கள் செயல்முறை ஆணை.எண். பஎ2 / 55 / தேர்வாணையம் -1 /2020/நாள்: 25.09.2020

------

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2018-19 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற போட்டித்தேர்வில் (தொகுதி-IVற்கானது) தேர்ச்சிபெற்று இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட செல்வி.S.நாகலட்சுமி (பிறந்த தேதி -10.02.1998) அவர்கள் பார்வை (2) (3),(4)மற்றும் (5)-ல் காணும் செயல்முறை ஆணைகளின் அடிப்படையில், இக்கோட்டக்கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பரமக்குடி திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டத்தில் 25.09.2020முப முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்ததை தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம்14/2016)ன் பிரிவு 28ன் படி இவரின் பணி இளநிலை உதவியாளர் பதவியில் 25.09.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கப்படுகிறது. இவர் இளநிலை உதவியாளர் பதவியில் தமது மூன்றாண்டுகால தொடர்பணியில் தமது இரண்டாண்டு கால பணியினை திருப்திகரமாக நிறைவு செய்தல் வேண்டும். மேலும் இத்தகுதிகாண் பருவ காலத்தில் இவர் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்

மேற்கண்ட பணிவரன்முறை ஆணையானது, சென்னை உயர்நீதிமன்றம் சென்னை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் ஒருங்கிணைந்த குடிமை பணிகளுக்கான தேர்வு தொகுதி IVன் நியமனம் தொடர்பாக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் நீதிமன்றத்தால் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் ஆணை வழங்கப்படுகிறது.

15/12/2020

செயற்பொறியாளர், பொபது.நீ.ஆ.து
திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம்,
காரைக்குடி.

பெறுநர்:
செல்வி.S.நாகலட்சுமி
இளநிலை உதவியாளர், பொபது.,நீ.ஆ.து.,
திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்ட அலுவலகம்
பரமக்குடி

வழி: உதவி செயற்பொறியாளர்/திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம/பரமக்குடி மூலமாக